பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 09 2026 MONDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) தேயிலைத் துறையில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

2) டெங்கு காய்ச்சல் பரவலை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. விஜய் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

3) சென்னை, பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் அமைக்கும் முடிவினை கைவிடுவதாக த.வெ.க. அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்று திமுக கோரியுள்ளது.

4) தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<

தேயிலைத் துறையில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

நீலகிரி மாவட்டம், குன்னூரில் தென்னிந்திய தோட்ட அதிபர்கள் கூட்டமைப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

உலக சந்தையில் இந்திய தேயிலையின் பங்கினை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தேயிலை தொடர்பான ஆராய்ச்சி, தர மேம்பாடு மற்றும் வர்த்தக வாய்ப்புகளிலும், தொழிலாளர்கள் நலனிலும் இந்த கூட்டமைப்பு கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு நவீன பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் குடியரசு துணைத்தலைவர் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<

டெங்கு காய்ச்சல் பரவலை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. விஜய் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் இதுதொடர்பாக ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

கொசு ஒழிப்பு பணிகளை தீவிரப்படுத்துமாறும், இதுகுறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் முதலமைச்சர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

இப்பணிகளை மக்கள் நல்வாழ்வுத்துறையோடு இணைந்து, இதர துறைகளும் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தயார் நிலையில் இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. விஜய் இந்த கூட்டத்தில் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் த.வெ.க. வெற்றிபெறும் என்று மாநில அமைச்சர் திரு. அருண்ராஜ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - அருண்ராஜ் 38 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

சென்னை, பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச்செயலகம் அமைக்கும் முடிவினை கைவிடுவதாக முதலமைச்சர் திரு. விஜய் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இன்று சென்னையில் மீனவர் சங்க நிர்வாகிகளின் கோரிக்கை மனுவை பெற்றுக் கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

த.வெ.க அரசின் இந்த முடிவுக்கு எதிராக மீனவர்கள் நடத்தி வரும் போராட்டத்திற்கு திமுக முழுஆதரவு அளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பட்டினப்பாக்கத்தில் தலைமைச்செயலகம் கட்டுவதற்கான அரசாணை வெளியிட்ட பின்னர், இதுதொடர்பாக முடிவெடுக்கப்படவில்லை என்று அமைச்சர்கள் கூறுவது உண்மைக்கு மாறானது என்றும் திரு. மு.க. ஸ்டாலின் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, அரசாணை வெளியிட்ட பின்னர் மீனவர்கள் மற்றும் பொதுமக்களிடம் பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், அதனை செயல்படுத்துவது தொடர்பாக இறுதி முடிவெடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டதாக மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் அடிப்படையில் மாநில அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்த கருத்தில் தவறேதும் இல்லை என்றும் தெளிவுபடுத்தினார்.

>>>>>><<<<<

போதைப்பொருள் புழகத்கத்தை கட்டுப்படுத்த த.வெ.க. அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பால் மற்றும் மின்சாரத்திற்கு தட்டுப்பாடு நிலவும் சூழலில், போதைப்பொருள் மட்டும் தடையின்றி கிடைப்பதாக குறை கூறினார்.

மின்வெட்டை த.வெ.க அரசு நியாயப்படுத்தக்கூடாது என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<

தமிழக மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை உடைக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த இரண்டு நாட்களில் ஏராளமான படகுகள் உடைக்கப்பட்டதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பிரச்சினையில் மத்திய மாநில அரசுகள் உடனடியாக தலையிட்டு, படகுகள் உடைக்கப்படுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

>>>>>><<<<<

த.வெ.க. அரசுக்கு அளித்து வரும் ஆதரவு தொடரும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை பட்டினப்பாக்கத்தில் தலைமைச்செயலகம் கட்டும் முடிவினை த.வெ.க. அரசு கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் நடப்பு கொள்முதல் பருவத்தில் இதுவரை ஒரு லட்சத்து 17 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

நெல் கொள்முதல் நிலையங்களில் உள்ள குறைபாடுகள் குறித்து விவசாயிகள் புகார் அளிக்க ஏதுவாக வாட்ஸ்ஆப் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விவசாயிகள் தங்கள் புகார்களை 9 5 0 0 8 0 1 4 6 5 என்ற வாட்ஸ்ஆப் எண்ணில் தெரிவிக்கலாம் என்று அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

தமிழகத்தில் சேவல் சண்டைக்கு தடை விதிக்கப்படவில்லை என்று காவல்துறை தலைவர், சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான வழக்கு, நீதிபதி லட்சுமிநாராயணன் முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, காவல்துறை தலைவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவல் சண்டையை முறைப்படுத்தும் நோக்கில் தான் சுற்றறிக்கை பிறப்பிக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, இந்த சுற்றறிக்கை குறித்து காவல்துறைக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

சேவல் சண்டைக்கு தடையில்லாததால் மனுதாரர், சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தை அணுகி அனுமதி பெற்றுக்கொள்ளலாம் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக

வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte - வி ஆர் துரை - 34 Sec. )*

>>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கை முகாம் நாளை மறுநாள் நடைபெறும் என்று ஆட்சியர் திரு. தினேஷ்குமார் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட ஐந்தரை லட்சம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள நீர்நிலை கரைகளில், பனைவிதைகளை நடவு செய்யும் பணிகளை ஆட்சியர் திருமதி. Vandana Garg இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில்துறையினருடன் ஆட்சியர் திரு. பிரதாப் இன்று கலந்துரையாடினார்.

>>>>>><<<<<

தென்காசி மாவட்டத்தில், போக்ஸோ மற்றும் PCR சிறப்பு நீதிமன்றங்களை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. S.A. தர்மாதிகாரி இன்று காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

>>>>>><<<<<

நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. மதுபாலன் இன்று வழங்கினார்.

>>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் தூய்மை இந்தியா மற்றும் அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கத்தின் கீழ், மூவாயிரம் மரக்கன்றுகள் இன்று நடப்பட்டன.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் துப்பாக்கிச் சுடும் பிரிவில் Himanshu Dhillon வெள்ளிப்பதக்கத்தையும், Rudrankksh Patil வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர். ஆடவர் 10 மீட்டர் குழுப்பிரிவிலும் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

மகளிர் 60 கிலோ எடைப்பிரிவு தற்காப்பு கலை போட்டியில் Suchika Tariyal வெண்கலப்பதக்கம் வென்றார்.

குத்துச்சண்டை போட்டியின் ஆடவர் 70 கிலோ எடைப்பிரிவில் Sumit Kundu காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா 17-1 என்ற கோல்கணக்கில் இந்தோனேஷியாவை வென்றது.

ஆடவர் பேட்மிண்டன் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் 56 கிலோ எடைப்பிரிவு Wushu போட்டியில், Aryan காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 12-வது இடத்தில் உள்ளது.

>>>>>END<<<<<